SENGUNTHAR

# Daily News

23-02-2026/SEC/DN/362




நாமக்கல் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்களிடையே போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் குறும்படம் தயாரித்து வெளியிடும் நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சியர் தலைமையில் 23.02.2026 (திங்கள் கிழமை) அன்று காலை 9.30 மணிக்கு நாமக்கல் சட்டக் கல்லூரியில் நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் மாவட்டத்தின் அனைத்து பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள், போதைப்பொருள் தடுப்பு மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



SENGUNTHAR Shrine 2 Success
கற்க கசடற

SENGUNTHAR ENGINEERING COLLEGE (AUTONOMOUS)
TIRUCHENGODE-637205,NAMAKKAL (Dt),TAMILNADU

## STUDENTS CORNER

### சர்வதேச தாய்மொழி தினம்



நம் கல்லூரியில் இன்று (23, பிப்ரவரி) International Mother Language Day மிகச் சிறப்பாகவும் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டது. மொழி, மரபு மற்றும் பண்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் நுவலி தமிழ் மன்றம் சார்பில் பல்வேறு இலக்கிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

ந்நிகழ்வில் அனைத்து துறைகளிலும் இருந்து மாணவர்கள் ஆர்வமுடன் பங்கேற்று கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி ஆகியவற்றில் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். மாணவர்கள் தங்கள் மொழிப் புலமை, தமிழ் அறிவு, சொல்லாற்றல் மற்றும் பேச்சாற்றலை திறம்பட வெளிப்படுத்தி நடுவர்களின் பாராட்டுகளையும் பார்வையாளர்களின் கைதட்டல்களையும் பெற்றனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், அனைத்து போட்டியாளர்களும் தாய்மொழியின் மகத்துவத்தை உணர்ந்து தமிழை பாதுகாக்கும் உறுதியுடன் செயல்படுவோம் என உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். 👏👏👏👏 👏👏👏👏 👏👏👏👏 👏👏👏👏 👏👏👏👏

**நுவலி தமிழ் மன்றம் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்கள்**

SENGUNTHAR ENGINEERING COLLEGE
(AUTONOMOUS)
NAAC Accredited with 'A' Grade,
(Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai)
Recognized Under Section 2(f) & 12(B) of the UGC Act, 1956
TIRUCHENGODE- 637 205

CIRCULAR

23.02.2026

Ref .: 022 / SEC / Attendance / 2026

The Management and the Principal appreciate our Students for their **100% (Cent per Cent) Attendance Today (23.02.2026)**.

| Sl.No | Department | Strength | Year |
|---|---|---|---|
| 1. | MECH | 23 / 23 | III |
| 2. | R&A | 10 / 10 | II |

23/2/2026

PRINCIPAL

Copy Submitted to the Correspondent, SEC

Copy to:
1. Executive Director
2. All Deans
3. All HODs for staff & Students circulation
4. E-Circular I / C
5. IQAC
6. Office

SENGUNTHAR
Daily News
23-02-2026/SEC/DN/362

## நுவலிதமிழ் மன்றம் - தினம் ஒரு திருக்குறள்



குறள் 723:
பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத்து அஞ்சா தவர்.
விளக்கம்:
அமர்க்களத்தில் சாவுக்கும் அஞ்சாமல் போரிடுவது பலருக்கும் எளிதான செயல், அறிவுடையோர் நிறைந்த அவைக்களத்தில் அஞ்சாமல் பேசக்கூடியவர் சிலரேயாவர்.

## இலக்கணக் குறிப்பறிதல்

**தொடரமைப்பு சிறப்பு**

எழுவாய் – செயப்படுபொருள் – பயனிலை
- நான் பாடத்தைப் படித்தேன்

செயப்படுபொருள் – எழுவாய் – பயனிலை
- பாடத்தை நான் படித்தேன்

பயனிலை – எழுவாய் – செயப்படுபொருள்
- படித்தேன் நான் பாடத்தை

எழுவாய் – பயனிலை – செயப்படுபொருள்
- நான் படித்தேன் பாடத்தை

செயப்படுபொருள் – பயனிலை – எழுவாய்
- பாடத்தைப் படித்தேன் நான்

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: டிரேடர்ஸ் தமிழ்மொழி : வணிகர்


SENGUNTHAR ENGINEERING COLLEGE (AUTONOMOUS)
TIRUCHENGODE-637205,NAMAKKAL (Dt),TAMILNADU